## 13

# கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (2 பேதுரு 2:1–22)

*முட்டாளாக்கப்படுதல் என்பது நம்மில் பெரும்பான்மையானோர் நல்ல தயவுடன் தாங்கிக் கொள்ள மிகவும் கடினமான நிகழ்வுகளில் ஒன்றாக உள்ளது. கர்த்தருடைய சபையின் சபைக் குழுமங்கள் மத்தியில் கருத்துவேற்று மையைப் பரப்பிய கள்ளப்போதகர்களைப் பற்றிப் பேதுரு விவரித்தபோது, கிறிஸ்தவர்களுக்கு அவர், "அவர்களால் எடுத்தாளப்படும் அபாயத்தில் இருக்கிறீர்கள்" என்று கூறினார். வஞ்சிக்கும் உபதேசமானது ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்கு மாறலாம். வஞ்சித்தல் என்பது நிலையானதாக உள்ளது. போதகர்களின் கனிகளும் வாழ்வு நடையும் அதிகம் சுட்டிக்காட்டப் படுபவையாக உள்ளன. அவர்களின் உபதேசத்தைப் பேதுரு விவரித்திருந்தால் அது ஆர்வமுடையதாக இருந்திருக்கும், ஆனால் நாம், தேவனுக்கு எதிரான கூற்றுக்களைக் கையாளும் திறன் உடையவர்களாக இருக்கும்படி, அறிவுறுத்துதல்களைக் கொண்டிருத்தல் என்பது நமக்கு மிகவும் ஆதாயமுள்ளதாக இருக்கிறது.*

## *கள்ளப்போதகர்கள் சத்தியத்தின் வழியைத் தூஷிக்கின்றனர் (2:1-9)*

*எதிர்த்து நிற்குதல்கள் மகிழ்வற்றவைகளாக உள்ளன. நம்மில் பெரும்பான்மை யானவர்கள், சாத்தியப்படுகிறபோது அவற்றைத் தவிர்க்கிறோம், ஆனால் எதிர்த்து நிற்குதலைத் தவிர்த்தல் என்பது சிலவேளைகளில் கோழைத்தனம் போன்றதாகவே இருக்கலாம். விஷயங்களை நன்கு அறிந்துள்ள நல்ல ஆண்களும் பெண்களும் அமைதியாக அமர்ந்து, சுயவிருப்பமும் சுயத்தைச் சேவித்தலும் கொண்டவர்களைப் பொறுப்பேற்க அனுமதிக்கும் சிலவேளைகளில், பயங்கரமான விஷயங்கள் நடக்கின்றன. நாம், "துன்மார்க்கருக்கு முன்பாக நீதிமான் தள்ளாடுவது கலங்கின கிணற்றுக்கும் கெட்டுப்போன சுனைக்கும் ஒப்பாகும்" என்று வாசிக்கிறோம் (நீதிமொழிகள் 25:26). சபையானது தேவனைக் கனப்படுத்தவும் அதன் உபதேசங்கள் தூய்மையானதாகக் காத்துக்கொள்ளப்படவும் வேண்டுமென்றால், நல்ல மற்றும் அறிவுமிக்க மக்கள் பேசுவதற்குத் தைரியம் கொண்டிருக்க வேண்டும். பேதுரு யாருக்கு இந்த நிருபத்தை எழுதினாரோ, அவர்களில் சிலர் கள்ளப்போதகர்களால் இழுப்புண்டு இருந்தனர், ஆனால் மற்றவர்கள் செயலற்று மாத்திரம் இருந்தனர். பேதுரு, விசுவாசம் நிறைந்தவர்களைச் சத்தியத்திற்காக நிலைநிற்கும்படி இணைக்க விரும்பினார்.*

### *அவர்கள் எதிர்பார்க்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர்*

*பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் எச்சரிக்கைகள் இருந்தபோதிலும், சபையானது போர்க்களத்தைப் போல் இருப்பதைக் காட்டிலும் இறகுப்படுக்கையைப் போல் இருப்பதை மக்கள் அடிக்கடி எதிர்பார்க்கின்றனர். பழைய ஏற்பாட்டில் கள்ளத் தீர்க்கதரிசிகள் பலர் இருந்தனர் (2:1). எரேமியா, எருசலேம் நலமாயிருக்கும், தேவன் தமது ஆலயம் விழுவதை ஒருக்காலும் அனுமதிக்கமாட்டார், மற்றும் தாவீதின் குமாரர்களில் ஒருவர் தேவனுடைய மக்கள்மீது எப்போதும் ஆளுகை செலுத்துவார் என்று உறுதிப்படுத்திய கள்ளப்போதகர்கள் பலருக்கு எதிராக நின்றார். எரேமியா, பிரபலமாக இல்லாத ஒரு செய்தியைப் பேசும் சுமையைக் கொண்டிருந்தது மட்டுமின்றி, தாங்களும் தேவனிடத்தில் இருந்து ஒரு செய்தியைக் கொண்டிருந்ததாக உரிமை கோரியவர்களின் நிலையான ஏளனத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.*

*கள்ளத் தீர்க்கதரிசிகள் இருந்தது போலவே, சபைக்குள் கள்ளப்போதகர்களும் எழும்புவார்கள் என்று பேதுரு தமது வாசகர்களுக்கு உறுதிப்படுத்தினார் (2:1). இதேபோன்ற ஒரு எச்சரிக்கையைப் பவுல், எபேசுவில் இருந்த சபையின் மூப்பர்களுக்குக் கொடுத்தார்: “நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்” (நடபடிகள் 20:29. 30). எச்சரிக்கைகள் இருந்தும்கூடக் கிறிஸ்தவர்கள், சபையின் சமாதானத்தைக் கள்ளப் போதகர்கள் தொந்தரவு செய்யும்போது, அடிக்கடி முற்றிலுமாகத் திகைப்படைகின்றனர். எதிர்ப்புகளின் முன்னிலையில் சில கிறிஸ்தவர்கள் ஊக்கம்குறைந்துபோய் கிருபையிலிருந்து விழுந்துள்ளனர் (2:2).*

*பேதுருவை நாம் கவனித்துக் கேட்டால், கிறிஸ்தவர்கள் மதரீதியான தவறை எதிர்த்து நிற்கக் கூடியவர்களாயிருக்கக் கிறிஸ்துவின் போதனைகளில் போதிய அளவு அறிவுடையவர்களாக இருக்க வேண்டும் என்று நாம் முடிவுசெய்தாக வேண்டும். கள்ளப்போதகர்கள் அழிவுக்கேதுவான தேவவிரோதமான விஷயங்களைத் தந்திரமாகக் கொண்டுவருவார்கள். அவர்களும் அவர்களால் வஞ்சிக்கப்படுகிறவர்களும், சத்தியமார்க்கத்தை அவமானத்திற்குக் கொண்டுவருவார்கள்.*

### *தேவன் அவர்களுக்கு நியாயதிபதியாக இருப்பார்*

*கிறிஸ்தவர்கள் கள்ளப் போதகர்களைப் பின்பற்றினாலும் இல்லையென்றாலும் அல்லது அவர்களை எதிர்த்து நின்று அவர்களின் தவறுகளை வெளிப்படுத்தினாலும் இல்லையென்றாலும், இறுதியில் தேவன் அவர்களுக்கு [கள்ளப்போதகர்களுக்கு] நியாயாதிபதியாக இருப்பார். தேவனுக்கு எதிராகக் கலகம் செய்பவர்களைத் தேவன் எப்போதுமே நியாயந்தீர்த்துள்ளார், மற்றும் பேதுரு இந்த நிருபத்தை எழுதிய இந்த வேளையில் கலகம் செய்தவர்களுக்கும் அவர் அதையே செய்வார் என்று பேதுரு வாதிட்டார். இது மறுத்துரைக்கக் கடினமானதாக இருக்கும்படி, அப்போஸ்தலர் இரட்சித்து இருக்க - அறிந்து இருக்கிறார் என்ற ஒரு சொற்றொடரைப் பயன்படுத்தினார் (வசனங்கள் 8, 9ல் காணவும்).*

*பாவம் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல் அவர்களை நரகத்தில்*

*விழத்தள்ளினார் என்று பேதுரு கூறினார் (2:4). கிறிஸ்தவர்கள் மத்தியில் விடாப்பிடியாக நிலைத்திருக்கும் பழங்கதை ஒன்று, சாத்தான் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்த தூதனாக இருந்தான் என்றும் அதனால் அவன் தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து வெளித்தள்ளப்பட்டு, மனித குலத்தை சோதிப்பவனாகவும் எதிராளியாகவும் பூமியில் எங்கும் உலாவிக்கொண்டு இருக்கிறான் என்று கூறுகிறது. 2:4ல் சாத்தானை கண்டறியக் கணிசமான கற்பனை தேவைப்படுகிறது. இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தூதர்களைப் பற்றி நாம் இவ்விடத்தில் உள்ளதைத் தவிர வேறெதுவும் அதிகமாக அறிவ தில்லை. சாத்தானுடைய தொடக்கம் பற்றி நாம் ஒன்றும் அறிவதில்லை மற்றும் அவனது வரலாற்றைச் சிறிதளவே அறிந்து இருக்கிறோம். அதிக மாக அறிய வேண்டும் என்று விரும்புதல் நமக்கு இயல்பானதாக இருக்கலாம், ஆனால் தேவன் வெளிப்படுத்தத் தேர்ந்து கொண்டுள்ளவற்றுடன் நாம் திருப்தி யடைந்தாக வேண்டும்.*

*சாத்தானைப் பற்றிப் பேசும் போது, வேதாகமத்தில் இருந்து குறிப்பிட்ட சில பக்கங்கள் கலந்துரையாடப் படுகின்றன. அவற்றில் ஏசாயா 14:12ம் ஒன்று ஆகும், இவ்வசனத்தில் KJV வேதாகமம், “விடிவெள்ளி” என்பதற்கான எபிரெய வார்த்தையை, அதே அர்த்தம் தரும் “லூசிபர்” என்ற இலத்தீன் வார்த்தையைக் கொண்டு மொழிபெயர்த்துள்ளது. சந்தர்ப்பப்பொருளில் தீர்க்கதரிசி, பாபிலோன் அரசரின் உயர்த்தப்பட்ட மகிமையை, “விடிவெள்ளி” என்று அடையாளத்துவமாக அழைத்து, அதை அவர் பெற்றுக்கொள்ள இருந்த முற்றிலுமான கைவிடப்பட்ட நிலையுடன் நேரெதிராக ஒப்பிட்டார். இவ்வசனப்பகுதியில் சாத்தானைப் பற்றிய குறிப்பெதுவும் ஏற்படுத்தப்பட வில்லை.*

*லூக்கா 10:18ல் இயேசு, சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைத் தாம் கண்டதாகக் கூறினார், இவ்வசனப் பகுதியில் சாத்தான் குறிப்பிடப்பட்டுள்ளான், ஆனுல் எழுபது (அல்லது எழுபத்தி இரண்டு) பேருக்கு இயேசு கொடுத்திருந்த அற்புத வல்லமையினால் அவன் அடையாளத்துவ மாகக் கீழே தள்ளப்பட்டான் என்பதை, சந்தர்ப்பப் பொருளின் ஆய்வு செயல்விளக்கப்படுத்தும். இவ்வசனப்பகுதியானது சாத்தான் வானத்திலிருந்து தள்ளப்பட்ட தூதனாக இருக்கிறான் என்பது பற்றி எதுவும் கூறுவதில்லை.*

*வெளிப்படுத்தின விசேஷம் 12ம் அதிகாரம், சாத்தானின் தொடக்கம் பற்றி அடிக்கடி குறிப்பிடப்படும் இன்னொரு வசனப்பகுதியாக உள்ளது. மிக உயர்வான உருவகநடைப் புத்தகத்தில், மிக உயர்வான உருவகநடைப் பகுதி யில், சாத்தான் தேவனுக்கு எதிராக யுத்தம் செய்ததாகவும் அவன் பூமிக்குத் தள்ளப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதே சந்தர்ப்பப்பொருளில், சூரியனை ஆடையாக அணிந்திருந்த ஒரு பெண், கிறிஸ்து என்று உறுதியாக நம்பப்படுகிற ஒரு ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். இவ்வசனப்பகுதியை நேரடி அர்த்தம் தருவதாக வலியுறுத்துபவர்கள், ஒரு பெண் சூரியனை எவ்வாறு உடுத்திக்கொள்ள முடியும் என்று அறிய ஆர்வம் கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. திரும்பக் கூறுவதென்றால், சாத்தானின் தொடக்கம்பற்றி வேதாகமம் நமக்கு எதுவும் கூறுவதில்லை; 2:4 இவற்றில் மிகவும் குறைவானதைக் கூறுகிறது.*

*தூதர்கள் நரகத்தில் தள்ளப்பட்டனர் என்று பேதுரு கூறியபோது, அவர் வேதாகமத்தில் இந்த இடத்தில் மாத்திரம் வரக்கூடிய ஒரு வார்த்தையைப்*

பயன்படுத்தினார். இது காணப்படாத உலகத்தின் கீழே உள்ள ஒரு வட்டாரத்தைக் குறிப்பிடும் கிரேக்கப் புராணத்தில் உள்ள ஒரு வார்த்தையான, "டார்ட்டாரஸ்" என்பதன் வினைவடிவமாக உள்ளது. "டார்ட்டாரஸ்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதன் மூலம் பேதுரு, பாதாள வட்டாரத் தின் குறிப்பிட்ட சில பகுதியைக் குறித்தார் என்று கருத்துத் தெரிவிக்கச் சில மாணவர்கள் அரும்பாடுபட்டுள்ளனர். அது தள்ளப்பட இயலாததாக இருக்கையில், தற்செயலான ஒரு வார்த்தையை எடுத்துக்கொண்டு, அதிலிருந்து பாதாளத்திற்கு ஒரு வரைபடத்தை வரைதல் என்பது யூகத்துவமானதாக உள்ளது. யூகத்துவத்தின்மீது கிறிஸ்துவ போதனையைக் கட்டியெழுப்ப நாம் முயற்சி செய்கிறவரையில், அல்லது நாம் யூகிக்கையில் வேதாகமம் போதிப்பது என்ன என்பதன்மீது நமது கண்ணோக்கை இழந்துபோகாத வரையில் அது தீங்கற்றதாக உள்ளது. தேவன் தூதர்களைத் தப்பவிடவில்லை என்று பேதுரு கூறினார். பின்வரும் கருத்தை நாம் காணாது விடக்கூடாது: அவர் கள்ளப்போதகர்களையும் தப்பவிடமாட்டார்.

தேவன் தூதர்களை நியாயத்தீர்ப்பிற்கென்று ஒப்புக்கொடுத்தார் என்பது பற்றிய பேதுருவின் விவரித்தலானது, நமக்கு நன்கு அறியப்படாததாக இருந்தாலும், அவரது [பேதுருவின்] முதல் வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்டதாக இருக்கலாம். இருப்பினும் அவரது அடுத்த விவரித்தலானது, அவரது முதல் வாசகர்களுக்குப் போலவே இன்றைய நாட்களில் உள்ள நமக்கும் நன்கு பழக்கமானதாக உள்ளது. தேவன் நோவாவின் நாட்களில் இருந்த பூர்வ உலகத்தைத் தப்பவிடவில்லை என்று அப்போஸ்தலர் குறிப்பிட்டார் (2:5). KJV வேதாகமம் இவ்விடத்தில் சில விளக்கங்களைத் தரவேண்டியிருக்கிறது. தேவன், "எட்டாவது நபரான நோவாவைக் காப்பாற்றினார்" என்று அது கூறுகிறது. நோவா எந்தக் கருத்தில் எட்டாவது நபராக இருந்தார்? அது எட்டுத் தலைமுறைகளை அர்த்தப்படுத்த முடியாது, ஏனெனில் நோவா, ஆதாமில் இருந்து பத்தாம் தலைமுறையானவராக இருந்தார். 1 பேதுரு 3:20ம் வசனம் ஒரு குறிப்பை அளிக்கிறது; வெள்ளப்பெருக்கு வந்தபோது எட்டு நபர்கள் காப்பாற்றப்பட்டனர் என்று அது குறிப்பிடுகிறது. நோவாவும் மற்ற ஏழுபேர்களும், மொத்தத்தில் எட்டுப்பேர்கள் காப்பாற்றப்பட்டனர் என்பதே 2:5ன் அர்த்தமாக உள்ளது.

பேதுருவின் மூன்றாவது விவரிப்பு, ஆபிரகாமின் நாட்களில் இருந்து வருகிறது. தூதர்கள் மற்றும் வெள்ளப்பெருக்கிற்கு முற்பட்ட உலகத்தவர் ஆகியோர் மீது தேவன் நியாயத்தீர்ப்பிட்டது போலவே, அவர் சோதோம் மற்றும் கொமோரா என்ற பழங்கால நகர்கள் மீதும் நியாயத்தீர்ப்பிட்டார் (2:6-8). தேவன் நோவாவை விடுவித்தது போலவே அவர் லோத்தையும் விடுவித்தார். நீதியுள்ளவர்களை எவ்வாறு விடுவிப்பது என்றும் குற்றம் செய்தவர்களை எவ்வாறு நியாயந்தீர்ப்பது என்றும் கர்த்தர் அறிந்திருந்தார் (2:9). அவர் எப்போதும் அவ்வாறு செய்திருக்கிறார், மற்றும் அவர் ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைகளை இடர்ப்படுத்திக் கொண்டிருந்தவர்களுக்கும் அவ்வாறே திரும்பவும் செய்வார்.

## *கள்ளப்போதகர்கள் துணிகரமுள்ளவர்களாக சுய விருப்பம் கொண்டவர்களாக இருக்கின்றனர் (2:10-16)*

*சிலவேளைகளில் உண்மையான ஒரு கிறிஸ்தவர், வேதாகமத்தைப் பற்றியும் அதன் போதனை பற்றியும் கேள்விகளைக் கொண்டுள்ளார் மற்றும் தமது கேள்விகேட்கும் செயல்முறையில், அவர் வேதாகம போதனைக்கு நேரெதிரான கருத்துக்களை வெளிப்படுத்துகிறார். அப்படிப்பட்ட விஷயத்தில் அவருடன், பக்குவமடைந்த ஒரு கிறிஸ்தவர், வேதாகமம் அறிவின் தொடக்க முனையாக உள்ளது என்று கருத்தைப் பயன்படுத்தி, மென்மையாகவும் உறுதியாவும் விவாதிக்க வேண்டும். இளைய, அனுபவம் இல்லாத அல்லது சத்தியத்தை உண்மையாக நாடுகிற மக்கள், பேதுருவுக்கு பழக்கமான சபைகளில் தேவனுக்கு எதிரான அழிவுக்கேதுவான கருத்துக்களைப் பரப்பிக்கொண்டிருக்கவில்லை. அவர்கள் தீர்மானமான வகையில் கையாளப்பட வேண்டியவர்களாக இருந்தனர்.*

### *அவர்கள் இறுமாப்பு உள்ளவர்களாக இருந்தனர்*

*பல மக்களுக்கு, உண்மையான, சிந்தனை நிறைந்த கேள்விகளைக் கேட்டல் என்பது வளர்ச்சிக்கான பாதையாக இருந்துள்ளது. நமது மனங்களில் எழுப்பப்பட்ட கேள்விகளை நாம் கேட்கும்போது அல்லது ஜாக்கிரதையான பகுத்தறிதல் அல்லது உறுதியான ஆதாரம் என்பவற்றின் மீது உள்ளதைக் காட்டிலும் நாம் நமது கண்ணோக்குக் கருத்துக்களைத் தற்காப்பதற்கு அதிகம் ஆர்வமாக இருக்கும்போது, பிரச்சனைகள் மேம்படுகின்றன. இவ்வகையான மனநிலைக்குள் நழுவி விழுதல் சுலபமாக உள்ளது. எனது எழுதுமேஜையின்மேல் "எல்லாவற்றையும் அறிந்துள்ளதாக நினைக்கும் மக்கள், நம்மில் எல்லாவற்றையும் அறிந்துள்ளவர்களுக்கு மிகவும் எரிச்சல் மூட்டுபவர்களாக உள்ளனர்" என்று எழுதப்பட்டுள்ள நகைச்சுவை அடையாளப் பலகை ஒன்றுள்ளது. துணிகரம் மற்றும் சுயவிருப்பம் ஆகியவற்றைக் கொண்டவர்களுக்கு தங்களை உய்த்துணருதல் என்பது பெரும்பாலும் கடினமாக உள்ளது.*

*கண்ணியக்குறைவான அகங்காரம் என்பது கள்ளப்போதகர்களின் ஒரு அடையாளக்குறிப்பாக உள்ளது என்று பேதுரு கூறினார்: "… இவர்கள் … மகத்துவங்களை தூஷிக்க அஞ்சாதவர்கள்" (2:10).* NIV *வேதாகமம், "அவர்கள் பரலோக ஜீவிகளைத் தூஷிக்க அஞ்சாதவர்கள்" என்று கூறும் வேளையில்,* KJV *வேதாகமம், "அவர்கள் மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள்" என்று கூறுகிறது. இவ்விடத்தில் குறிப்பானது தூதர்களை அல்லது மனிதரில் மேன்மையுள்ளவர்களை என்று யாரைப் பற்றியதாக இருந்தாலும், கள்ளப்போதகர்கள், தங்களுடையவற்றைக் காட்டிலும் பெரியதாக உள்ள அந்த அதிகாரம், வல்லமை அல்லது அறிவு என்பவற்றிற்கு மரியாதை எதையும் கொண்டிருப்பதில்லை (2:11). அவர்கள் தாங்கள் புரிந்துகொள்ளாதகாரியங்களில் தூஷித்தல் அல்லது பகைத்தல் என்பது சிறிதளவே வியப்புக்குரியதாக உள்ளது (2:12). கற்றறிந்தநிலை, அனுபவம் அல்லது பக்தி ஆகியவற்றில் அவர்கள், தங்களுக்குப் போதிக்கும் நிலையில் உள்ள எவரொருவர்மீதும் வெறுப்பைச் செயல்விளக்கப்படுத்துகின்றனர் என்பதே இவ்விடத்தில் மறைவான*

கருத்தாக உள்ளது. தூதர்கள்கூட அமைதலாய் இருக்கக்கூடிய சூழ்நிலையில் இவர்கள் துரிதமாகப் புகுந்து அபிப்பிராயங்களை வீசுகிறவர்களாகவும் குற்றஞ்சாட்டுகிறவர்களாகவும் இருக்கின்றனர்.

**அவர்கள் சுய ஈடுபாட்டிற்கு ஒப்புக்கொடுத்தவர்களாக உள்ளனர்**

பேதுரு, தமது வாசகர்கள் தங்களுக்குப் போதிக்க வருபவர்களின் தனிப்பட்ட வாழ்வைக் கண்ணோக்குமாறு வேண்டிக்கேட்டுக் கொண்டார். அவர் இவ்விடத்தில் விவரித்த போதகர்கள், முற்றிலும் உணர்வு உறைந்த மனிதர்களாக, உலகசிந்தை உள்ளவர்கள்கூட இரவின் மூடுகையில் செய்யலாம் என்று ஒதுக்கி வைத்துள்ள தவறான நடக்கையைப் பரந்த பகல்வெளிச்சத்தில் கொண்டுள்ளவர்களாக இருந்தனர் என்று இவர் விவரித்தார். அவர்கள் பரிசுத்தவான்களின் கூடுகைகளில் கறைகளும் இலச்சைகளுமாக இருந்தனர் என்று பேதுரு கூறினார் (2:12-14).

கள்ளப்போதகர்கள் “செம்மையான வழியைவிட்டுத் தப்பிநடந்து” என்ற பேதுருவின் கூற்றானது, அவர்கள் ஒருகாலத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தனர் என்று மறைமுகமாய் உணர்த்துவதில்லை (2:15). அவர்களின் வாழ்வுகள் நேரான வழியை விட்டுவிலகுதலின் நிலையான மாதிரிகளாக இருந்தன. கள்ளப்போதகர்கள் பொதுவாக, தங்கள் தனிப்பட்ட ஆதாயத்திற்காகத் தவறாகப் பயன்படுத்தக்கூடிய நிலையற்ற ஆத்துமாக்களின் தோழமையைக் கண்டறியக் கூடியவர்களாக இருந்தனர். இவ்விஷயத்தில் அவர்கள், தேவபக்தியைக் கூலிபொருத்திய தீர்க்கதரிசியான பாலாம் என்ற தங்கள் ஆவிக்குரிய முன்னோரைப் பின்பற்றுகின்றனர் (2:15, 16).

## கள்ளப்போதகர்கள் கேட்டிற்கு அடிமைகளாக இருக்கின்றனர் (2:17-22)

2ம் அதிகாரத்தில் கள்ளப்போதகர்களைப் பற்றிய விவரிப்பு, யூதா எழுதிய நிருபத்தில் அவர்களைப் பற்றிய விவரிப்புக்கு இணையாக உள்ளது. உதாரணமாக, யூதா எழுதியதில் உள்ள தண்ணீரற்ற மேகங்கள் மற்றும் பேதுரு எழுதியதில் உள்ள தண்ணீரில்லாத கிணறுகள் ஆகியவற்றிற்கு இடையில் சிறிதளவே வேறுபாட்டை நாம் காணுகிறோம். அண்மைக்கிழக்கு நாடுகளில் பருவநிலையானது அடிக்கடி வெப்பமாகவும் உலர்ந்தும் உள்ளது. மத்திய தரைக்கடல் பகுதியின் மீது எழும்பும் ஒரு மேகம் அல்லது பாலைவனத்தில் உள்ள ஒரு பசுஞ்சோலை என்பது புத்துணர்வு பெற்றுக்கொள்ளுதலை வாக்களிக்கிறது. இம்மனிதர்களின் போதனை ஆத்துமாக்களுக்குப் புத்துணர்வைக் கொண்டுவரவில்லை (2:17). இந்த விவரிப்பை வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் முடிவு வார்த்தைகளுடன் நேரெதிராக ஒப்பிடுதல் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது: “தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்” (வெளிப்படுத்தின விசேஷம் 22:17).

பேதுரு எதிர்த்து நின்ற கள்ளப்போதகர்களில் மிகச்சிறப்பானவர்கள் சிலர் இருந்தனர் என்பது உறுதி (2:18). மேலும் அவரது வாசகர்களில், பக்குவமற்ற மற்றும் கொஞ்சமே அறிவுறுத்தப்பட்டிருந்த, உலகத்தின் கேடுகளில்

*இருந்து சமீபத்தில்தான் தப்பித்திருந்த மக்களும் உள்ளடங்கி இருந்தனர். கள்ளப்போதகர்கள், மாம்ச இச்சைகள் மற்றும் விடுதலை, சுயாதீனம் ஆகியவற்றிற்கான வாக்குறுதிகள் ஆகியவற்றைக் கொண்டு, தங்களைக் கணிச மான அளவு மக்கள் பின்பற்றச் செய்யக் கூடியவர்களாக இருந்தனர் (2:19). கிறிஸ்தவர்கள், தங்கள் ஆத்துமாக்களின் நிமித்தம், தங்களுக்குப் போதிக்கப் பட்டவற்றின் கருத்துப் பொருள் மற்றும் தங்களை உணர்வெழுச்சி கொள்ளவும் களிப்பூட்டவும் பயன்படுத்தப்பட்ட தந்திரங்கள், மூடல்கள் மற்றும் ஜாலங்கள் ஆகியவற்றை ஜாக்கிரதையாக வித்தியாசப்படுத்த வேண்டும்.*

*பேதுருவின் வாசகர்களைக் கிறிஸ்துவை விட்டுப்புறம்பே வழிநடத்திக் கொண்டிருந்த போதகர்களுக்கு, "சுயாதீனம்" என்பது சாதகமான ஒரு வார்த்தையாக இருந்தது. சுயாதீனம் என்ற பெயரில் மக்கள் தங்கள்மீது தாங்களே கொண்டுவரும் அடிமைத்தனம் மற்றும் பரிதாபநிலை என்பது வாழ்வின் மாபெரும் முரண்பாடுகளில் ஒன்றாக உள்ளது. வேறு எதைக் காட்டிலும், கர்த்தரால் உரைக்கப்பட்ட சத்தியம் இதுவாக உள்ளது: ஒரு நபர் அர்ப்பணித்தல் மூலமாக மாத்திரமே ஜீவனைக் கண்டறிவார். "கோதுமை மணி" வாழ்ந்திருப்பதற்கு முன்னர் சாக வேண்டும் (யோவான் 12:24). மத்தேயு 10:39; 16:25; மாற்கு 8:35; லூக்கா 9:24; 14:26; 17:33 மற்றும் யோவான் 12:25 ஆகிய வசனப்பகுதிகளில் வார்த்தையில் சிறு வேறுபாடுகள் உள்ளன, ஆனால் சிந்தனையின் கருத்துப்பொருள் ஒன்றாகவே உள்ளது.*

*சில சுயாதீனங்கள் தங்கள் இயல்பினாலேயே மற்ற சுயாதீனங்களை விலக்குகின்றன. மகிழ்ச்சி மிக்க குடும்பத்தைக் கொண்டிருத்தலுக்கான சுயாதீன மானது, திருமணத்திற்குப் புறம்பான உறவுகளைக் கொண்டிருத்தலுக்கான எந்த சுயாதீனத்தையும் விலக்கிவைக்கிறது. தெளிவான சிந்தையும் நல்ல ஆரோக்கியமும் கொண்டிருத்தலுக்கான சுயாதீனமானது மதுபானம் பண்ணுதலுக்கான சுயாதீனத்தை விலக்கி வைக்கிறது. நேர்மையான ஆண் அல்லது பெண், சுயமதிப்பைக் கொண்டிருத்தலுக்கான சுயாதீனமானது, பொய்யுரைத்தல், களவுசெய்தல் மற்றும் ஏமாற்றுதலுக்கான சுயாதீனத்தை விலக்கி வைக்கிறது. ஒவ்வொரு தனிநபரும் எந்த சுயாதீனம் தமக்கு முக்கிய மானது என்பதைத் தேர்ந்து கொண்டாக வேண்டும். ஆசியாமைனரின் சபைகளில் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் செய்த கள்ளப் போதகர்கள் தாங்களே அடிமை களாக இருந்தனர் என்று பேதுரு கூறினார். பின்பு அவர் "எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே" என்ற பலத்த கூற்றைக் கூடுதலாகக் கூறினார் (2:19). புதிய ஏற்பாட்டை எழுதிய ஏவுதல் பெற்ற மனிதர்கள், கிறிஸ்தவரின் சுயாதீனத்தை, சுய இச்சைக்கான அனுமதிச்சீட்டாகக் கண்ணோக்கவில்லை. யாக்கோபு, சுவிசேஷத்தை "சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணம்" என்று கூறினார் (யாக்கோபு 1:25; 2:12). பவுல், "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமா ணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" என்று எழுதினார் (ரோமர் 8:2).*

*கள்ளப் போதகர்கள் புதிதாக ஆதாயம் செய்யப்பட்ட மனமாறியவர்களை வஞ்சித்தபோது, அவர்களைத் தேவனுடைய இராஜ்யத்தில் இருந்து என்றென்றைக்குமாக வெளியேற்றி முத்திரை இட்டனர் என்பதே கள்ளப் போதகர்களைப் பற்றிய மாபெரும் துன்பமாக இருந்தது. பேதுரு, "அவர்கள்*

*நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்'' என்று கூறினார் (2:21). கிறிஸ்துவுக்குள் சமீபத்தில் மனமாறியவர், கர்த்தருடைய நாமத்தை உரிமை கோரியவர்களுடன் சேர்ந்துகொண்டு அற்பமான விவாதங்களில் ஈடுபட இழுக்கப்படுதல் என்பது, ஒருவேளை அவருக்கு நடக்கக் கூடியதில் மிகவும் அழிவுக்குரிய விஷயமாக இருக்கலாம். மிகவும் வெறுப்புடன் உலகத்திற்குத் திரும்பிச் செல்லும் சமீபத்தில் மனமாறியவரின் நிலையை விவரிப்பதற்கு, பேதுரு சாலொமோனிடத்தில் இருந்து ஒரு நீதிமொழியையும் (நீதிமொழிகள் 26:11) தமது காலத்து உலகத்தில் இருந்து இன்னொரு பழமொழியையும் தரவழைத்தார். கிறிஸ்துவை அறிந்த பின்பு உலகத்திற்குத் திரும்புகிற எவரொருவரும், தான் கக்கினதைத் தின்னத் திரும்பிய நாயை போன்றவராக அல்லது சேற்றிலே புரளத் திரும்பிய பன்றியைப் போன்றவராக உள்ளார் (2:22).*

## முடிவுரை

*புறம்பான சக்திகளிடமிருந்து ஏற்பட்ட உபத்திரவங்களினால் துன்புற்றுக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்திக் கட்டி எழுப்புதல் என்பது பேதுரு எழுதிய முதல் நிருபத்தின் நோக்கமாக இருந்தது. இது, 2 பேதுரு நிருபத்தில் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சனைகளுடன் ஒப்பிடப் படுகையில், ஓரளவு மகிழ்ச்சி நிறைந்த பணிப்பொறுப்பாக இருந்துள்ளது. வெளியில் இருந்து வந்த உபத்திரவங்களின் முன்னிலையில் சபையானது எப்போதுமே நன்கு வளர்ந்துள்ளது; உள்ளாக இருக்கும் அழிவு சக்திகளின் முன்னிலையில் அது அவ்வளவு நன்றாக வளர்ந்திருப்பதில்லை. கிறிஸ்துவின் சபையானது கர்த்தருக்காக உலகத்தின்மீது செல்வாக்குச் செலுத்த வேண்டுமென்றால், கிறிஸ்தவர்கள், உள்ளிருந்து எழும்பும் பிரச்சனைகளை எதிர்கொள்ளத் தைரியம் கொண்டிருக்க வேண்டும்.*